**I Additional District Court, Thoothukudi.**

**<u>O.S.No.110/2021                                        நாள் : 27.07.2026</u>**

**<u>பி.சா.1– திரு. சாம் ஜெப ஆஸ்லின்.</u>**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

வாதி என் அத்தை. வாதி பி.சா.ஆ1 எழுதிக் கொடுத்த சமயத்தில் நான் இளவர். வா.சா.ஆ1 எழுதும்போது என் தகப்பனாரும், வாதியும், பாட்டியும் என்ன பேசிக் கொண்டார்கள் என்பது எனக்கு தெரியும். என் தகப்பனார் வீட்டில் பேசிக் கொண்டதை வைத்து தெரியும். நான் அப்போது பள்ளியில் படித்துக் கொண்டிருந்தேன் என்றும், ஆனால் என்ன பேசிக் கொண்டிருந்தார்கள் என்பது தெரியும் என்று வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. பி.சா.ஆ1– ஐ வாதி எழுதிக் கொடுக்கும் சமயத்தில் வாதி எந்த பணமும்பெற்றுக் கொள்ளவில்லை என்றால் வாதியின் திருமண சமயத்தில் வாதிக்கு அதிகமான நகைகளை கொடுத்ததாலும், வாதி லண்டனில் வசதியாக வாழ்ந்து வருவதாலும் பணம் வேண்டாம் என்று சொல்லிவிட்டார். நிரூபண வாக்குமூலத்தை நான் படித்து பார்த்துதான் கையொப்பமிட்டேன். வாதிக்கு நிறைய நகைகள் கொடுத்ததாகவும், வாதி லண்டனில் வசதியாக வாழ்ந்து வருவதாலும் பி.சா.ஆ1க்காக வாதி பணம் வேண்டாம் என்று சொல்லிவிட்டதாக நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை. அந்த விபரம் பி.சா.ஆ1னிலும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். என் பாட்டியும், என் தகப்பனாரும் 19.11.2018ல் விபத்தில் இறந்துவிட்டார்கள். என் பாட்டி பெயரிலும் தகப்பனார் பெயரிலும் பி.சா.ஆ1க்கு பிறகு சொத்துக்கள் குறித்து பட்டா மாற்றம் செய்யப்படவில்லை என்றால் சில சொத்துக்கள் குறித்து மாற்றம் செய்யப்பட்டது. 1ம் பிரதிவாதியின் எதிர் வழக்குரையை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன்.

பி.சா.ஆ1 நடைமுறைக்கு வரவில்லை என்றும், வாதி கோரியபடி தீர்ப்பாக வேண்டுமென்றும், 1ம் பிரதிவாதி கேட்டிருக்கிறார் என்றால் சரிதான். பி.சா.ஆ1 நடைமுறைக்கு வந்து விட்டதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை. என் பாட்டி, என் தகப்பனார், 1ம் பிரதிவாதி ஆகியோர் சேர்ந்து அனுபவிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் வாதி பி.சா.ஆ1–ஐ எழுதிக் கொடுத்தார் என்றால் சரிதான். 19.11.2018ல் என் பாட்டியும், தகப்பனாரும் இறந்துவிட்டதால் பி.சா.ஆ1 நடைமுறைக்கு வராமல போய்விட்டது என்றால் சரியல்ல. பி.சா.ஆ1 பெயரளவிலானது என்றும், நடைமுறைக்கு வரவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. என் பிறந்த தேதி 17.12.2005. நான் மேஜராவதற்கு முன்பாகவே 1ம் பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல் செய்துவிட்டார் என்றால் சரிதான். பி.சா.ஆ1 குறித்து வாதி சொல்லும் சங்கதிகளை 1ம் பிரதிவாதி எதிர் வழக்குரையில் ஏற்றுக் கொண்டுள்ளார் என்றால் சரிதான். என் பாட்டி இறந்துவிட்டதால் அவரது பாகத்தில் வாதிக்கும் ஒரு பங்கு உண்டு என்றால் வாதி விடுதலை செய்து கொடுத்துவிட்டதால் வாதிக்கு பங்கு இல்லை. பி.சா.ஆ1 நடைமுறைக்கு வராததாலும், சொத்துக்கள் கூட்டு அனுபவத்தில் இருந்து வருவதாலும் சொத்துக்களை பாகம் பிரிக்காமல் இருந்து வருகிறோம் என்றால் சரியல்ல. வாடகை தொகையை வசூல் செய்து மூன்று பங்காக பிரித்துக் கொள்கிறோம் என்றால் சரியல்ல. இரண்டு பங்காகத்தான் பிரிக்கிறோம். ஆவணம் இல்லை என்றால் வங்கி கணக்கில் பாதி பாதியாக போட்டிருக்கிறோம். அதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை. எத்தனை சொத்துக்கள் குறித்து பி.சா.ஆ1 எழுதப்பட்டது என்றால் என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியாது. தாவா சொத்துக்களுக்கான பட்டா இன்றுவரையில் என் பாட்டி மற்றும் அவரது பிள்ளைகள் பெயரில் கூட்டாக உள்ளது என்றால் சில சொத்துக்களை தன் பெயரிலும், சில

சொத்துக்களை 1ம் பிரதிவாதி பெயரிலும், சில சொத்துக்களை பாட்டி பெயரிலும் கூட்டாக மாற்றிவிட்டதாக சொன்னார். பி.சா.ஆ1 நடைமுறைக்கு வராததால் தாவா சொத்துக்களுக்கான பட்டா இன்று வரையில் வாதி உட்பட கூட்டாக இருந்து வருகிறது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை பொறுத்து வாதி எழுதிக் கொடுத்த பி.சா.ஆ1 பெயரளவிலானது என்றால் சரியல்ல. அதன்படி அனுபவிக்க வேண்டிய தரப்பினர்கள் காலமாகிவிட்டதால் பி.சா.ஆ1 நடைமுறைக்கு வரவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களின் உடைமை மற்றும் அனுபவம் அனைத்து தரப்பினர்களிடமும் உள்ளன என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி மனநிலை பாதிக்கப்பட்டவர் என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை. அவர் நல்ல மனநிலையுடன் இருந்து வருகிறார் என்றும், மனநிலை பாதிக்கப்பட்டதாக வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தாக்கல் செய்த பாகப்பிரிவினை வழக்கில் இந்த வழக்கின் வாதி மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி மனநிலை பாதிக்கப்பட்டிருப்பதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. என் தகப்பனார் இறந்து 3 ஆண்டுகளுக்குள் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதனால் இந்த வழக்கு காலவரைசட்டத்தால் பாதிக்கப்பட்டிருப்பதாக சொல்வது ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. ஆகவே தாவாப்படி தீர்ப்பாக வேண்டுமென்றால் சரியல்ல.

மேற்படி குறுக்கு விசாரணை 1ம் பிரதிவாதி தரப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

MUNISWAMI THANDAVAN Digitally signed by MUNISWAMI THANDAVAN

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
தூத்துக்குடி.